போய் வேறே எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறார்கள். மூலக் கேள்வி சீர்காழியைப் பொருத்தது. ஒவ்வொரு தாலுக்கா தலை நகரத்திலும் கூடுமான வரைக்கும் சிவில் நீதிமன்றமும், கிரிமினல் நீதிமன்றமும் இருப்பதாகத் தான் இருக்கிறது. கோரிக்கை வருகின்ற நேரத்தில் உயர் நீதிமன்றத்தை கலந்தாலோசித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்கனவே நீதிமன்றங்களை பொருத்த அறிக்கை கொடுக்கப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையிலேதான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம்.

*3522 திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

ஆம், திருந்திய வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் உயர் நீதிமன்றத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்பதற்காக என்னுடைய அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதைய கட்டிடம் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கட்டிடம். வயதான நிலையிலே ஆடிக்கொண்டிருக்கிறது. மாவட்ட கட்டிடத்தில் மாவட்ட நீதிமன்றமும் மற்றைய சார்பு மன்றங்களும் உரிமையியல் மன்றமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் குற்றவியல் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் எல்லாம் பல்வேறு இடங்களில் பிரிந்து இருக்கின்ற காரணத்தினால் வழக்கறிஞர்களும், பொது மக்களும் கஷ்டப்படுகின்ற நிலைமை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆகவே, பரிசீலனையில் எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பணியை அரசு விரைவாகச் செய்து முடிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். செய்து முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1989 அக்டோபர் 31]

(9-25)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கான குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்கான மதிப்பீடு 1 கோடியே 46 இலட்சம் ரூபாயிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. சில மாற்றங்கள் தேவை என்று கருதப்பட்டு உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தைக் கேட்டிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தின் கருத்து தெரிந்த பிறகு நிதிநிலைமையை அனுசரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த கட்டிடங்களைப் பொறுத்தவரையில், நெல்லை மாவட்டத்தில் நெல்லையில் ஒருங்கிணைந்த கட்டிடத்தில் இப்போது நீதிமன்றம் நடைபெறுகிறது. அங்கே ஏழு உரிமையியல் நீதிமன்றங்கள் நடத்துவதற்கும், நாலே நாலு குற்றவியல் நீதிமன்றங்கள் நடத்துவதற்கும்தான் இடமிருக்கிறது. ஆகவே ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ள பழைய கட்டிடத்தில் இன்னும் மூன்று குற்றவியல் நீதிமன்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே குற்றவியல் நீதிமன்றக் கட்டிடத்தில் இன்னொரு தளம் முதல் தளம் அமைத்து, அந்த மூன்று நீதிமன்றங்களையும் இங்கே கொண்டு வருவதற்காக நாங்கள் கோரிக்கை விடுத்திருக்கிறோம். அது விரைவில் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள் பழமையான கட்டிடங்களில் நடைபெறுகின்றன. அது மாத்திரமல்லாமல், இப்போது சிவில் நீதிமன்றங்களும், கிரிமினல் நீதிமன்றங்களும் ஒரே இடத்தில் அமையவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டின் தேவைகளைக் கருத்தில் கொண்டு. உயர்நீதிமன்றத்தைக் கலந்து கொண்டு, தமிழ்நாடு முழுவதற்கு தேவையான நீதிமன்றக் கட்டிடங்களைப் பற்றி ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்யப்படவேண்டும் என்ற கருத்து அரசிற்கு இருக்கிறது, நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக இருந்து வருகிறது. நிதிக் கமிஷன் வந்த நேரத்திலும் நாம் தெரிவித்து இருக்கிறோம். 'அப்கிரேடேஷன் ஆஃப் ஜூடிஷியரி' என்ற முறையிலே நீதிமன்றக் கட்டிடங்கள் விஸ்தரிப்பு இவை

களையெல்லாம் செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறோம். எனவே நிதிப் பற்றாக்குறைதான் காரணமாக இருக்கிறதே தவிர, இதுபோல் கட்டிடங்கள் கூடவேண்டும் என்று அரசு விரும்புகிறது. எனவே, நம்முடைய உறுப்பினர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் சொன்ன கருத்தையும் மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் எழுப்புகின்றபோது நீதிபதிகளுக்கும் அங்கே தங்குவதற்கு வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும்போது காம்பவுண்டு சுவரும் சேர்த்து எழுப்புவதற்கு ஏற்பாடு உண்டா? விருத்தாச்சலத்தில் சமீபத்தில் நீதிமன்றக் கட்டிடங்கள் மட்டும் எழுப்பப்பட்டு, நீதிபதிகளுக்கு அங்கே குடியிருப்பதற்கு வசதியில்லாத ஒரு நிலை இருக்கிறது. காம்பவுண்டு சுவரும் இல்லை. தற்போது அதற்கு ஏதாவது கோரிக்கை வந்ததா? அமைச்சரவர்கள் அனுமதி அளித்து தொடர்ந்து விரைவிலே அதையும் செய்து கொடுப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் அழகான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. நான் நேரிலே பார்த்தேன். அவ்வளவு அழகான கட்டிடத்தைப் பெற்று இருக்கிற திரு. பூவராகன் அதை பாராட்ட வேண்டும் என்று நான் கருதினேன். இன்று ஒட்டுமொத்தமாக நீதிமன்றங்கள் அமைக்கும்போது நீதிபதிகளுக்கும் இருப்பதற்கான குடியிருப்புகளை ஏற்பாடு செய்கிறோம். சில இடங்களில் தவறு இருந்தால் அதைத் திருத்திக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஒட்டுமொத்தமாக நீதிமன்றங்களில் பணியாற்றக் கூடிய நீதிபதிகள் அத்தனை பேருக்கும் நீதிமன்றங்களுக்கு அருகாமையிலேயே அரசாங்கத்திற்கு இடமிருக்குமானால் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. காம்பவுண்டு சுவரைப் பற்றிச் சொன்னார்கள். உடனடியாக காம்பவுண்டு சுவர் இப்போது தேவையாக இருக்காது என்று கருதிய காரணத்தால் அது அனுமதிக்கப்படவில்லை. நீதிமன்றத்திற்கு வருபவர்கள், அதிகமாக முள் வேலி போட்டாலே தடுத்துக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே இந்தக் கருத்தை மனதிலே கொண்டு அந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 அக்டோபர் 31]

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடங்கள் கொண்டு வருவது போல் திருவண்ணா மலை-சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலையில் ஒருங் கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, அது நிலைமைக்குத் தக்கவாறு பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாகவே 'நிலக்கோட்டை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் அட் வத்தலக்குண்டு' என்று பல முறை இந்த சட்டமன்றத்திலே அமைச்சர்களால் உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியும்கூட இதுவரைக்கும் அது நடைபெறவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும்—முதல்வர் அவர்களும் இங்கே இருக்கின்றார்கள்—அவர்களும் சேர்ந்து விரைவிலேயே வத்தலகுண்டிலே அந்த டிஸ்ட்டிரிக்ட் முன்சீப் கோர்ட் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர் களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல நிதிப் பற்றாக்குறை தான் காரணமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய கோரிக்கை ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை மையை அனுசரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 2175 மற்றும் 3159 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS